# செடல் மாரியம்மன்
# திருப்பு

Q25:417
N13
221093

உ

தேசிகன் துணை.

கூடலூரைச்சார்ந்த குறிஞ்சிபாடி குப்பம்

# செடல்மாரியம்மன்

## சிறப்பு.

இவை

மோல்மேன் அஷ்டாவதானம் தமிழ்ப்புலமை

ஸ்ரீ. கந்த சுவாமி தேசிகர் பிரதமமாணாக்கன்

கூடலூர்

டிராமா, உபாத்தியாயர்

M. A. வைத்திலிங்கம் செட்டியாரவர்களால்

இயற்றியதை

ஷை யூர் M. பாலகிருஷ்ண பிள்ளை யால்



விளம்பரம்

இப்புஸ்தகம் ஒவ்வொரு நேயர்களிடமும்.

அவசியமிருக்கவேண்டும்.

முதல்பதிப்பு காப்பிகள், 1000

இதன் விலை, 0 0 6

1913

செல்விக்குப்பம்.

R. வரதைய நாயுடு அவர்களது

ஸ்ரீ-வரலக்ஷ்மி விலாஸம் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

Q25:415 N13

221093

565/1913 III

உ

தேசிகன் துணை.

# செடல்மாரியம்மன்சிறப்பு.

## விநயகர் துதி.

லாவணி.

( அத்திமுகவனே என்றன் என்றவர்ணமெட்டு ),

செல்வவிநாயகரே அல்லும்பகலுமுன்னை
தெரிசனம் செய்து வருவேன்
சுகமே பெருவேன் எங்கள்
வல்லபையோனேயுந்தன் மாபாதம்தன்னிலெந்தன்
மனதுவைத்திட்டு பணிவேன்
உரைக்கத் துணிவேன் இன்னும்
எல்லவர் புகழ் செடல்மாரி
செடல்மாரி தனை
ஏற்றிதுதிப்போரெங்கும் கோரி
எங்கும் கோரி இன்று
கல்விக்களஞ்சியமாய் கவிபாடும் பாவலர்முன்
கழறிட வருள் வீரே
காட்சியைத்தரு வீரே

16
894.8111

---

ஆண். பெண்.

வழிக்கண்காட்சி.

[உடுமலையின் முத்துசாமி பாட்டை என்றதுபோல்]

1. கோமளமேவாகுறிஞ்சிபாடி என்னும்
குப்பத்தில்செடல்மாரியைநாடி சென்று
கொஞ்சு மொழி ரஞ்சிதமே வஞ்சிநல்வாத்தைப் பெரு
வோமே இனி
நாமே

2. எத்திசையிலே புகழ்கொள்மாரி ஞன்னும்
எவ்விதருனியமதிகாரி தன்னை
ஏற்றியே கரங்குவித்து போற்றியே திரும்பிடுவோம்
மானே எந்தன்
தேனே



3, கூட்டமாயெல்லோருமவர்கூடி சொன்ன
கோரிக்கைநிரைவேறக்கொண்டாடி செடல்
குத்தியே பேசும் விதத்தை பத்தினியே சொல்லமுடி
யாது ஒரு
போது

4. இன்னமுமுனக்குநன்றுபானே நின்று
எடுத்து யெல்லாமு முரைப்பேனே அதி
இச்சையாக லக்ஷணமாய் மெச்சிட வலங்கரித்து
வாராய் என்முன்
நேராய்

5. கட்டழகியேகவலைபேது என்ன
காரணத்தால்நிற்குராயிப்போது எந்தன்
கன்னியாளே நீநடந்து மின்னுமே வருகுவாயிப்
போது மட
மாது

6. கூடல்நகர்தன்னைத்தாண்டிவந்தோம் இன்னும்
கூறுவென்டோல்கேட்டையும்கடந்தோம் பெரும்
கோபமில்லாபாரியாளே தேவியங்காளம்மன் கோவில்
பாரு வாடி
நேரு

7, நூர்மறைக்காயர்கொட்டகையென்று கண்
ணேக்கமேவைத்தேசெல்லுவோமின்று பின்னே
நுட்பமாய்விரித்துரைப்பேன் அற்பமாயெண்ணாதேயின்று
நானே ஊில
வேனே

8. கல்லுவாய்க்காலென்றுரைப்பார் பாராய் இங்கு
கள்ளர்களடிப்பாரோடி வாராய் எந்தன்
கன்னியேகன்னாரப்பேட்டை காணுவாய் புதூரயில்வே
கேட்டு நல்ல
ரோட்டு

9. சிதைகுப்பம்பின்னால்போச்சுவாடி இதோ
தேவடியாசத்ரமதை நாடி வந்தோம்
தேவியே அன்னவலியே காணும்புலிகுத்திவாய்க்கால்
நீரு இல்லை
பாரு

10. சேடபாளையமதனைவிட்டு வரத்
தெரிபுதேதொண்டமானத்தம்துட்டு எடு
சுந்தமப்வெந்திலபாக்கு நத்திபே வாங்கிவருவேன்
நில்லு வண்டி
மல்லு

11. காட்டுசாகையென் றயிதைசொல்லி வெகு
கடுகவேநடந்துவாடிமெல்லி எந்தன்
கன்னிபெகுள்ளஞ்சாவடிபன்னுவேன்போலீஸ்டேஷனை
பார்த்து வாராய்
பூர்த்து

12. தோசைகள் மசால்வடைகள்வாங்கி இன்னும்
சொகுசையேபார்த்திட்டுவாடிபாங்கி சொல்வேன்
சூக்ஷமாய் நாவக்குளமே காட்சியுந் தெரியுதடி
வாடி பதம்
பாடி

13. இன்னமுமிங்கேயிருந்தால்தங்கும் கள்ளர்
எல்லவர்கூடியடிப்பாரிங்கும் நில்லா
தேகுவோம்தம்பிபேட்டையின்பாலமேயிரங்கிசெல்லு
வோமே வாடி
நாமே

14. மீனாக்ஷிபேட்டையுமேற்கேகண்டு வாராய்
மெல்லியேநேரமாகுதேயின்று வந்தோம்
மேன்மையேபெருகும்விருதாஜலம்ரோட்டையும்விட்டு
நில்லு பதில்
சொல்லு

15. குரிஞ்சிபாடிகுப்பம்வீதிகாக்ஷி சொல்ல
கொள்ளுமோநாவுமதுவத்தாக்ஷி என்ன
கோபமோ பேசாதுநிற்க பாபமேசெய்தேனென்னடி
கூறு வெகு
சீறு

16. உத்தமிசெடல்மாரியைநாடி மன
துள்ளத்தினிவிளைல்கொண்டாடி போவோம்
வோடிபென்மின்னேபெண்கள் கூடிபேமானிடர்களும்
யாருழ் வாரார்
பாரும்

சடல்மா



கூடல்நகர்வாழ்வயித்யலிங்கம் பதம்
கூறுவாபெங்குமேபிரசங்கம் போவோம்
காதையே யிதையுரைத்தால் யாதுமே விளையுமது
கர்து ஒரு
போது

## சிந்து.

கூருவேன்கேள்மயிலே இந்த
குறிஞ்சிபாடிகுப்பம் தன்னிலுமே
மாரியின்பெருமைதன்னை எந்தன்
மங்கையேஉறைத்திடகூடுமோடி
ஆடுகள்மாடுகட்கும் ஜீவன்
யாதுக்குநோய்களுமண்டிடிலோ
மானிடர்யாவருக்கும் இன்ன
மாரடைப்புசூனியம்நோய்கண்டிடிலோ
கோரிக்கைசொல்லிடவே செடல்
குத்துரேன்எனவுரைத்தால் மெத்தவுமே
தங்காதுதான்சுகமாய் யிருக்க
தானேபுரிகுவாள்மாரியவள்
பெருமையையொருவிதமே நானே
பேசிடக்கூடுமோமாதரசே
கணக்கினிலடங்காது மானிடர்
கண்கண்டயிடந்தனில்நிற்பதையே
கன்னியே நீபாரு உனக்கு
கவலையிருந்தால்மாரிமுன்கூறு
இப்படிவெகுகோடி ஜெனமே
எங்கும்வேண்டிபபடிதான்வருவார்
தோதைசெடல்தன்னைல் இழுத்து
செல்லும்விதத்தையானேசொல்லிடவே
சந்தைதோப்பினில்கூட்டம் மெத்த
தண்ணீர்பந்தலுமதுகண்ணோட்டம்
வைத்துவாயிவ்வேளை என்ன
வருத்தமிருக்கினுமேயின்னை
மாரிசன்னதிசெல்லு உந்தன்
மனதுவருத்தமதையேசொல்லு
தோதுசிங்காரம் அதனை
செப்பத்தாமோவெகு அலங்காரம்
பூவு பல்லாக்குபெருமை இன்னும்
புகன்றிடக்கூடுமோவேல்லையருமை

சுற்றிலும்பொம்மைகளாய் வெகு
சூக்ஷமாய்செய்துவைத்தார் இருநாளாய்
ஆகாயவாணங்களும் தீவட்டி
அதற்குதகுந்தகாஸ்லேட்டுகளும்
மத்தாப்புவேடிக்கையும் இதனை
மற்றெவரால்சொல்லத்தகுமோடி (தந்தின)

## சந்தையின் சிறப்பு.

### லாவணி.

சந்தையலங்காரத்தின் விந்தையைநானுமின்று
சாற்றுவேனொருவாரு
தையலே பாரு தருணமே
தைரியமுடனேரு

கந்தப்பொடிக்கடையே ஜோரு உந்தன்
கவலையெல்லாமுமிங்கு தீரு அதி
சுந்தரமாகநல்ல வெற்றிலைபாக்குவிற்கும்
சொகுஸதை நீகூரு காணவே
சொக்குதேகண்ணேரு

வாழைப்பழக்கடைகள் தாழ்விலாமலேவிற்கும்
வரிசையைகேள் மானே
சொல்லிடுவேனே வருகுவாய்
மாமயிலே நானே

கூடைகத்தரிக்காய்கள் சொந்தம் என்ன
கொள்ளுவாய்வேண்டியதனந்தம் அடி
காடைகவுதாரிகள்பேடைமயிலுங்கூடி
களிப்பாய்பாடுது பாரு பார்த்துவா
கன்னியே யென்னேரு

சட்டிபானைகடைகள் தட்டுபுட்டென்றுசத்தம்
தாக்குதேயிங்கு வாடி
தையலே கூடி சந்தையில்
சாமர்த்திய பதம்பாடி

குட்டிகுரத்திகளும்ஆடி கடைக்
கொருகாசுவாங்குராரே நாடி சவுக்
கட்டைவிறகுகடை மட்டும்வளையல்கடை
காணுவாயொருவாரு பார்த்துவா
கன்னியேயென்னேரு

அரிசிகடைகள்பக்கம் வரிசையாய்போகமனம்
ஆனந்தமாகுதின்று போலீஸ்டேஷன்
அன்னமேபாரின்று



வரிசையாய்கேட்டுமேசிங்காரம் எல்லா
வதிகாரிகளினலங்காரம் வார்த்தை
கருவிழியாளே நில்லா கவனமாய்கேட்டுச்செல்ல
கருத்துவைத்துமேபாரு வருகுவாய்
கவனமாயென்னேரு
உத்தமிஜெகமாரி நத்திதுதிக்ககோவிற்
கொருமிக்கபோகுவோமே
இன்றுமேநாமே அம்மன்பெருமை
உரைக்கவொண்ணுதாமே
சத்திமாரியென்றுமே யாரும் தூரந்
தன்னில்நின்றுவருவார்பாரும்
பத்தினியேவயித்தியலிங்கனுரைத்துவரும்
பதத்தையேநீபாரு கேட்டுமே
பரிந்துவாடியென்னேரு

## கும்மி.

கோமளமே வனிதா மணியே யிந்த
குரிஞ்சிபாடிகுப்பம்தன்னிலுமே
மாரிகிமைகொளுமேபுகழும்செடல்
மாரியைபோற்றுவோம்வாருங்கடி

ஆடுமாடு ஜீவன் யாதுக்கு நோயுமே
அண்டிலோயாரும் வேண்டிக்கொள்ள
வோடிபறந்திடும் நோய்களும்யாவுமே
ஒருமிக்கபோற்றிட வாருங்கடி

காசிமுதலும் ராமேஸ்வரம் வரையில்
கன்னியமாய் செடல்மாரிதனை
பூசித்துயாவரும் கொண்டாடிவருவார்
பொற்கொடியேயிதைப்பாருங்கடி

மானிடர் யாவரும் வேண்டிகொண்டபடி
மாசெடல்குத்தியே தான் வருவார்
காணக்கிடைக்காது யித்தகைக்காட்சியை
கண்டுகளித்திடவாருங்கடி

செடலதை அலகால் குத்தியே பின்னுமே
தேரையுங்கட்டி யிழுத்துவாரார்
படபடப்பில்லாமல் பாங்கியே நீ யிதை
பார்த்துதெரிசனை செய்யுங்கடி
வீதிவீதிதோறும் மாரி மாரி யென்று

## செடல்மாரியம்மன் சிறப்பு

வெல்லவருஞ்சொல்லி தான்வருவார்
யேதுமின்னமிதன் நற்புகழைச்சொல்ல
வற்குமோகூடியே பாருங்கடி

தண்ணீர் பந்தல்களில்நீர்மோரு சாதமும்
தானேகுடுத்திடும் விந்தையதை
எண்ணியேயெல்லாமும் சொல்லவுமேயின்று
எந்தனால் கூடுமே பாருங்கடி

காந்தலயிட்டுகள் வீதிகள்தோருமே
கட்டிடும் விந்தையைபார்த்திடுவாய்
சேர்ந்திடும் தீவட்டி யாகாஷவாணமும்
தெரியவிடுகுரார் பாருங்கடி

பூவு பல்லாக்கு பெருமையொருவிதம்
புகலவுமெந்தனாலாகுமோடி
பாவலர்புகழ் வயித்யலிங்கன் பதம்
பாடிதுதித்திடவாருங்கடி

### வாழி.

### விருத்தம்.

உத்தமியாள் செடலம்மன் வாழி வாழி
ஒருமிக்க தேவர்களும் வாழி வாழி
நத்தியிதை யெழுதிவைத்தோர் வாழி ; வாழி
நாடியேபடித்திடுவோர் வாழி வாழி
புத்தியினிற் சிறந்த கவி வாணர் வாழி
புகழுடனே வச்சிவிட்டோன் வாழி வாழி
மற்றுமுள்ள யாவர்களும் வாழி வாழி
ஸ்ரீவாலட்சுமிவிலாசம்பிரஸ் வாழி வாழி

### முற்றுப்பெற்றது.

### விருத்தம்

இந்த புத்தகத்தை யாரும் யெளிதினில் வோரயில்
சொந்தமென்றச்சிடாமல் துரைகவிராஜரே நீர்
எந்தனின் பதத்தைக்கண்டு இபல்புர ஆசிர்வாதம்
தந்துமே வாழ்கச்செய்வீர் சரணமே புரிந்திட்டேனே

---

எனது உத்தரவின்றி அச்சிடபடாமலிருக்க கோருகிறேன்.

இப்படிக்கு,

கூடலூர் டிராம உபாத்தியாயர் M. A. வைத்திலிங்கம்செட்டியார்.

Q25.415
N13
221093